Source: Tamil Murasu © SPH Media Limited
4 August 2024, Page 3
Permission required for reproduction

# ஆடை வடிவமைப்பில் வாழ்வியல் கலந்த புதுமை

*அன்றாடம் நம் கண்களில் படும் எளிய கூறுகளை ஆடை வடிவமைப்பில் புகுத்தி வருகிறார் ஆடை வடிவமைப்பாளர் பொன்னி அஷோக்.*

**லாவண்யா வீரராகவன்**

சென்னையைச் சேர்ந்த பொன்னி, அங்கிருந்து நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போதெல்லாம் லாரிகளின் பின்புறத்தைப் படமெடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

லாரிகளின் மஞ்சள், வெள்ளை, நீல நிறங்கள், அதில் வரையப்படும் சிறு சிறு வடிவங்கள் ஆகியவற்றை அடிப்டையாகக் கொண்டு, 'ஒடிஸி' (ODYSSEY) எனும் வகை ஆடையை வடிவமைத்துள்ளார்.

தந்தை குழந்தைநல மருத்துவர், தாய் மகப்பேறு மருத்துவராக இருந்தாலும், சிறு வயதிலிருந்தே கலை வடிவமைப்புகள் மீதிருந்த ஈர்ப்பால், வடிவமைப்பாளராக வேண்டும் என தனது பள்ளிப்பருவ காலத்திலேயே பொன்னி முடிவெடுத்தார்.

சென்னையில் பள்ளிக் கல்வியை முடித்த இவர், பன்முகத்தன்மை கொண்ட சமூகமான சிங்கப்பூரில் படிக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். அதன் பொருட்டு, லாசால் கலைக் கல்லூரியில் 'ஃபேஷன் டிசைன், டெக்ஸ்டைல்ஸ்' துறையில் இளங்கலைப் படிப்பை முடித்துள்ளார்.

இவ்வாண்டு முதலாம் வகுப்பு 'ஹானர்ஸ்' பட்டம் பெற்றுள்ள இவர், பெரிய வடிவமைப்பு நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்து அனுபவம் பெற விரும்புகிறார்.

தொடர்ந்து உயர்கல்வி கற்று, ஒரு நிறுவனத்தைத் தொடங்கி அன்றாட வாழ்வியல், இந்திய கலாசாரக் கூறுகள் ஆகியவற்றை ஆடை வடிவமைப்பு மூலம் உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனும் கனவை நோக்கிப் பயணிக்க உள்ளதாகவும் சொன்னார் பொன்னி. நீடித்த நிலைத்தன்மையில் ஆர்வம் கொண்டுள்ள இவர், தனது படைப்புகளில் இயன்றவரை அதனை உறுதி செய்ய வேண்டும் என்றும் விரும்புவதாகக் கூறினார்.

> அன்றாட வாழ்வியல், இந்திய கலாசாரக் கூறுகள் ஆகியவற்றை ஆடை வடிவமைப்பு மூலம் உலகிற்கு காட்ட வேண்டும் என்பதே கனவு.
>
> **பொன்னி அஷோக்**

### லாசால் கலைக் கல்லூரி பட்டமளிப்பு விழா

இவ்வாண்டின் லாசால் கலைக் கல்லூரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 2) சிங்கப்பூர் எக்ஸ்போவில் நடைபெற்றது.

போக்குவரத்து அமைச்சர் சீ ஹொங் டாட் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இவ்விழாவில், பட்டயக்கல்வி மாணவர்கள் பட்டயமும் இளங்கலை, முதுகலை மாணவர்கள் பட்டமும் என மொத்தம் 832 பேர் கல்விச் சான்றிதழ்களைப் பெற்றனர்.

கல்வியில் சிறந்து விளங்கிய 16 மாணவர்களுக்கு லாசால் உன்னத விருதுகளும் (LASALLE Award for Academic Excellence) வழங்கப்பட்டன.

பட்டம் பெற்ற மாணவர்களைப் பாராட்டிய நிதி இரண்டாம் அமைச்சருமான சீ ஹொங் டாட், தனித்துவப் படைப்பாற்றல், ஆக்கபூர்வச் சிந்தனையாளர்கள் அதிகம் தேவைப்படும் காலகட்டம் இது என்றார்.

லாசால் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு சிங்கப்பூரில் மாற்றத்தை ஏற்படுத்துவது கண்டு மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் திறன்களை வளர்த்துக் கொள்வதுடன், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் மேம்படுத்திக் கொள்வது அவர்களைப் பெரும் உயரத்துக்கு இட்டுச் செல்லும் என்கிறார் அவர்.

மாணவர்கள் திறன்களை வளர்த்துக் கொள்வதுடன், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் மேம்படுத்திக் கொள்வது அவர்களைப் பெரும் உயரத்துக்கு இட்டுச்செல்லும் என்றார் அமைச்சர்.





பொன்னி அஷோக்கின் (இடது) 'ஒடிஸி' ஆடை வடிவமைப்பு
**படங்கள்: பொன்னி அஷோக்**

lveer@sph.com.sg

**Innovative fusion of lifestyle elements in fashion design**

Fashion designer Ponni Ashok infuses the simple elements we see every day into fashion design.

**By Lavanya Veeraraghavan**

Ponni, who hails from Chennai, has a habit of taking pictures of the back of trucks whenever she travels on the highways.

Based on the yellow, white and blue colours of the trucks and the small patterns drawn on them, she designed a garment collection called *Odyssey*.

Ponni chose to become a designer throughout her school years despite the fact that her mother was an obstetrician and her father was a paediatrician, as she had always been fascinated by beautiful designs.

Having finished her education in Chennai, she made the decision to study in the diverse nation of Singapore and earned her bachelor's degree in fashion design and textiles from LASALLE College of the Arts.

Source: Tamil Murasu © SPH Media Limited
4 August 2024, Page 3
Permission required for reproduction

This year, having graduated with first class honours, she wants to work for large design firms to gain experience.

Ponni also stated that she intends to follow her dreams of going back to school for higher studies and launch a business that uses fashion design to bring the elements of Indian culture and daily life to the world. She is concerned about sustainability and strives to incorporate it into her works as much as possible.

**LASALLE College of the Arts Convocation**

This year's graduation ceremony for LASALLE College of the Arts students was held on Friday (2 August) at the Singapore Expo.

In total, 832 students were awarded diplomas, bachelor's degrees, and master's degrees during the ceremony, which was graced by Guest of Honour, Mr Chee Hong Tat, Minister for Transport.

Sixteen students who excelled in their studies were awarded the LASALLE Award for Academic Excellence.

Mr Chee Hong Tat, who is also the Second Minister for Finance, celebrated with the graduating students and said that this is a time when unique creativity and creative thinkers are needed more.

Additionally, he was also pleased to see the contributions of LASALE students in Singapore. According to him, students achieve great heights by honing their skills and strengthening their capacity to overcome obstacles.

The Minister said that by developing their skills and enhancing their ability to face challenges, students will be led to great heights.